## 8.11 29.09.86க்கு முன்னர் ஊராட்சி ஒன்றிய பணியைச் சார்ந்த மறைந்த ஊழியர்களின் வாரிசுகளாக அரசுப் பணியிடங்களில் நியமிக்கப்பட்ட பதவிகளை வரன்முறை செய்தல்

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண். 54 நாள் : 12.02.1988

பார்வை :

1. அரசாணை (நிலை) எண் 888, ஊரக வளர்ச்சி, நாள் 8.6.84
2. அரசாணை (நிலை) எண் 763, ஊரக வளர்ச்சி, நாள் 29.9.86
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண் ந.க. 8747/ஊ2/85, நாள் 8.3.85

**ஆணை**

பணிக்காலத்தில் இறந்த அரசு அலுவலர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்கும் சலுகை ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்ட பின்னர் மிகக் குறைந்த எண்ணிக்கைகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களையும் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுகளின் கல்வி மற்றும் வயதுத் தகுதிகளையும் கருத்தில் கொண்டு இவர்களுக்கும் தமிழ்நாடு தேர்வாணைக்குழுவின் எல்லைக்குட்பட்ட பணியிடங்களில் வேலைவாய்ப்பளிக்க பார்வை ஒன்றில் கூறப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசுப் பணிக்கு கொண்டு வரப்பட்ட நாளான 1.6.81க்கு முன்னர் இறந்த போன ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் வாரிசுதாரர்கட்கும் 8.6.84 நாளிட்ட ஊரக வளர்ச்சி & உள்ளாட்சி துறையின் அரசு ஆணை எண் 888, வெளியிடு முன்னர் இறந்து போன ஏனைய ஊராட்சி ஒன்றிய பணியாளர்களின் வாரிசுகட்கும், கருணை அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் வரம்பிற்குட்பட்ட பணியிடங்களில் நியமனம் செய்யலாம் என்பதைக் குறித்து அரசு மறு பரிசீலனை செய்தது. மேற்கண்ட செயற்குறிப்பை நடைமுறைப்படுத்த விதிகளில் இடமில்லாததால் 1.6.81க்கு முன் அதாவது ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு முன், பணியில் இருக்கும்போது இறந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் வாரிசுதாரர்களுக்கும் 1.7.74க்கு முன் ஊராட்சி ஒன்றிய பணியாளர்களான காசாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், தலைமை எழுத்தர் போன்றவர்கள் பணியில் இருக்கும்போது, இறந்த அன்னாரின் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களில் தான் வேலைவாய்ப்பளிக்க வேண்டுமென பார்வை இரண்டில் கண்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. இந்த ஆணையின்படி ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் (அரசு அலுவலர்கள் தவிர) வாரிசுகளுக்கு ஊராட்சி பணியிடங்களில் மட்டும் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

3. பத்தி இரண்டில் கூறப்பட்ட ஆணை வெளியிடப்பட்ட தேதிக்கு முன்னர் இறந்த சில ஊராட்சிப் பணியாளர்களின் வாரிசுதார்களுக்கும் அரசுப் பணியிடங்களில் வேலை வாயப்பு கொடுக்கப்பட்டது. இவ்வாறு செய்த நியமனங்களை தேர்வாணைக்குழுவின் இசைவு பெற்று வரன்முறை செய்ய ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு பார்வை மூன்றில் கூறப்பட்ட கடிதத்தில் அரசுக்கு ஒரு கருத்துருவை அனுப்பியுள்ளார்.

ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை அரசு ஆழ்ந்து பரிசீலனை செய்தது. ஊராட்சி பணியாளர்களின் வாரிசுகளில் சிலர் அரசுப் பணியிடங்களில் குறிப்பாக ஏழு ஆண்டுகளுக்கு மேலாக பணி செய்து வருகின்றனர். இவர்களை தற்பொழுது பணியிலிருந்து வேலை நீக்கம் அல்லது பதவி மாற்றம் செய்தால் அவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் துயர நிலை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதனால் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்தின் தன்மையே நிறைவேறாது. எனவே, 29.9.86க்கு முன்னர் ஊராட்சி ஒன்றிய பணியில் சேர்ந்த மறைந்த ஊழியர்களின் வாரிசுகளாக அரசுப் பணியிடங்களில் நியமிக்கப்பட்ட இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சரின் பதவிகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவின் இசைவினைப் பெற்று அவரவர்களின் சம்பந்தப்பட்ட ஆணை வெளியிடப்படும் தேதியிலிருந்து வரன்முறை செய்ய அரசு ஆணை வெளியிடுகிறது.

இந்த ஆணை வேலைவாய்ப்பு மற்றும் பணி மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைகளின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. அவைகளின் அலுவல் சார்பற்ற எண் 117/பி1/88–1, நாள் 14.1.88/4032/88.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆணையர் மற்றும் செயலாளர்